திருமணமா?
தரம் நாடுவோர்
தவறாமல் நாடுவது
Niru
Unit 16 College Fields Business Centre
Prince George's Road, London SW19 2PT
Tel: 020 8640 8228

இலவசம்
The UDHAYAN
# உதயன்

அன்பு நெஞ்சங்களிற்கு
உதயனின்
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

உங்கள் பிரதியினை இலவசமாக எடுத்து செல்லுங்கள்!
UN-9 November, 2000 Pages 12 e-mail : thelondon@udhayan.freeserve.co.uk

உள்ளே....

சிறிமா 4ம் பக்கம்

ஐஸ்வர்யா மீது காதல் 6ம் பக்கம்

பிரதமரின் தீபாவளி வாழ்த்து 2ம் பக்கம்


# 400,000 சிறுபான்மையினர் வேலைக்கு தயாராக உள்ளனர் 150,000 தேர்ச்சியாளர்களை தருவிக்க அரசு திட்டம்

பிரித்தானியாவில் 400,000 சிறுபான்மையினர் வேலைக்கு தயாராக இருக்கின்றனர். ஆனால் அரசு ஆண்டிற்கு 150,000 தேர்ச்சியாளர்களை தருவிக்க திட்டமிட்டு வருகிறது. பிரித்தானியாவின் குடிவரவு சட்டங்கள் தளர்த்தப்படுவது சிறுபான்மை சமூகங்களால் மிகவும் வரவேற்கப்படுகிறது. அதே சமயம் இங்கு ஏற்கனவே புலம்பெயர்ந்து உள்ள சிறுபான்மை சமூகங்கள் இன்றும் பிற்படுத்தப்பட்ட நிலையிலேயே காணப்படுகிறது. மேலும் பிரித்தானியாவிற்கு தஞ்சம் கோரி வருவோர்மீதும் கடுமையான போக்குகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இவ்விரு விடயங்கள் பற்றியும் அரசு முறையான பரிசீலனையை மேற்கொள்ள வேண்டும் என அகதி அமைப்புகளும் சிறுபான்மை அமைப்புகளும் கேட்கின்றன.

Trade Union Congress TUC வெளியிட்டு உள்ள அறிக்கையில், பிரித்தானியாவில் 21 வீதமான சிறுபான்மையினர் பட்டதாரி ஆகின்றார்கள்; வெள்ளை இனத்தவர்கள் 16 வீதமானவர்களே பட்டதாரி ஆகின்றனர்; ஆனால் உயர் பதவிகள் அளிக்கப்படும் போது திறமைக்கு பதிலாக நிறமே பார்க்கப்படுவதாக அவ்வமைப்பு சுட்டிக் காட்டி உள்ளது. நடைமுறையில் உயர் பதவிகள் பெரும்பாலும் வெள்ளை இனத்தவர்களிற்கே வழங்கப்படுகிறது. மேலும் தொழிலகங்களில் சிறுபான்மையினர் இனவாதத்தினால் பாதிக்கப்படுவதாகவும் அந்த அறிக்கை மேலும் தெரிவித்து உள்ளது.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

## முன் அணி நோக்கி இந்திய நகர்வு

பனி போர் காலத்தில் ரஷ்ய ஆதரவுடன் செயற்பட்டு வந்த இந்தியா, தற்போது உறவுகளை சமப்படுத்தி வருகிறது. அணு ஆயுத வல்லரசுகளில் ஒன்றாக உள்ள; உலகின் பெரிய ஜனநாயக நாடான இந்தியா தற்போது ரஷ்யாவுடனும் அமெரிக்காவுடனும் பரஸ்பரம் சுமுகமான உறவுகளை வளர்த்து வருகிறது.

வாஜ்பாயின் அமெரிக்க விஜயத்தின் போது அவரிற்கு மிகுந்த வரவேற்பு வழங்கப்பட்டது. வாஜ்பாய் அமெரிக்க கொங்கிரஸில் உரையாற்றும் போது "எம் இரு நாடுகளிற்கும் பொதுத்தன்மைகள் நிறைய உண்டு. எமது நலன்களில் வேறுபாடுகள் இல்லை." என்றும் குறிப்பிட்டார். 'இரு நாடுகளினதும் நட்பு நன்கு முதிர்ச்சி அடைந்து



மிகவும் நல்ல நிலையில் உள்ளது,' என்று அமெரிக்க அதிபர் கிளின்டன் குறிப்பிட்டார். இரு நாடுகளிற்கும் இடையேயான உறவுகள் பொருளாதார வளர்ச்சியாக மாற்றப்படும் என்பது அனைவரும் அறிந்ததே.

தற்போதைய ரஷ்ய தலைவரது விஜயமும் மிகவும் முக்கியமானதாகவே கருதப்படுகிறது. இந்தியா சுதந்திரம்

(5ம் பக்கம் தொடர்ச்சி)

## CPJ நிருபரின் கொலைக்கு கண்டனம்

### குடாநாடு சர்வதேசத்தில் இருந்து துண்டிப்பு



தனது வாழ்க்கையின் பெரும் பகுதியை ஊடகத்துறையில் செலவழித்த மயில்வாகனம் நிர்மலராஜன் அவரது இல்லத்தில் வைத்து சுட்டு கொல்லப்பட்டார். யாழ் குடாநாட்டில் பணியாற்றிய மிகச்சில நிருபர்களில் ஒருவராகிய நிர்மலராஜன் தனது 38 ஆண்டுகால வாழ்க்கையின் பெரும்பகுதியை செய்தித் துறையிலேயே செலவழித்ததாக தெரிவிக்கப்படுகிறது. பிபிசி தமிழ், சிங்கள சேவையிலும் ராவய, வீரகேசரி ஆகிய பத்திரிகைகளிலும் இவர் பணியாற்றி வந்தார். வேறு சர்வதேச செய்தி நிறுவனங்களிற்கும் செய்திகளை வழங்கி வந்தார் என்பது

(5ம் பக்கம் தொடர்ச்சி)

## பிரித்தாணிய ஆசிய மில்லியனர்கள் சிக்கலில்

பிரித்தானிய ஆசியர்களில் இரண்டாவது பெரும் செல்வந்தர்களான £2 பில்லியனிற்கு சொந்தக்காரர்களான ஹின்டுஜா சகோதரர்கள் போபர்ஸ் நிறுவனத்திற்கும் இந்திய அரசிற்கும் இடையேயான ஒப்பந்தத்தை ஏற்படுத்தி கொடுத்ததற்காக $8.3 மில்லியனை பெற்று கொண்டார்கள் என குற்றம் சாட்டப்பட்டு உள்ளனர். இலண்டனில் உள்ள சிறிசந், கோபிசந் ஆகிய இருவரும் மும்பாயில் உள்ள பிரகாசும் இந்திய அரசாங்கத்தை, போபர்சுடன் ஒப்பந்தத்தில் ஈடுபட தூண்டியதற்காக, போபர்ஸிடம் இலஞ்சம் பெற்றுள்ளதாக இந்திய மத்திய புலனாய்வு பிரிவு குற்றம்சாட்டி உள்ளது.

இலண்டனில் வசிக்கும் இரு சகோதரர்களையும் விசாரணைக்கு கேட்போம் என்று மத்திய புலனாய்வு பேச்சாளர் நடராஜன் தெரிவித்தார். அப்படி கேட்கும் பட்சத்தில் சர்வதேச விதிகளிற்கு கட்டுப்பட்டு விசாரணைகள் நடைபெற உதவும் என பிரித்தானிய வெளியுறவு பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இச் சகோதரர்கள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவர்கள் ஏழு ஆண்டுகள் இந்திய சிறையில் அடைக்கப்படுவார்கள்.

Mr Clean என அழைக்கப்பட்ட ராஜீவ் காந்தியை 1989ல் பதவியிறக்கிய போபர்ஸ் ஊழல் விவகாரம் மீண்டும் கிளறப்படுகிறது. 1986ல் சுவிஸ் போபர்ஸ் நிறுவனத்திடம் £1.4 பில்லியன் Howitzer Guns கொள்முதல்



ஒப்பந்தத்தை இந்திய அரசாங்கம் செய்திருந்தது. இவ் ஒப்பந்தத்தை தான் பெற்று கொள்ள போபர்ஸ் நிறுவனம் $3 பில்லியனை இலஞ்சமாக அப்போதைய ராஜீவ் அரசிற்கு வழங்கியதாக குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் இவ் இலஞ்சப் பணத்தில் ராஜீவ் காந்தி சம்பந்தப்பட்டதற்கான உறுதியான சாட்சியங்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஆயினும் 1986ல் இருந்து இந்த போபர்ஸ் விவகாரம் வெறும் அரசியல் இலாபங்களிற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது தற்கொலை தாக்குதலில் கொல்லப்பட்ட ராஜீவின் மனைவி சோனியா காந்தி மீண்டும் இந்திய அரசியலில் தலைதூக்குவதை கட்டுப்படுத்தவே இந்த போபர்ஸ் விவகாரம் மீண்டும் கிளறப்பட்டு வருவதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

The Japanese Car Centre
Suppliers of New & Used quality Vehicles
Selection of
Honda — Civic, Accord, Prelude
Nissan — Primera, Sunny, Micra
Toyota — Previa, Corolla, Carina
Mitsubishi — Colt, Space Wagon
Mazda — 323, 626
Green Flag Approved Dealer
Serviced & Valeted
£££ Finance Available Subject to Status
Parts & Labour Warranty
HPI Checked
Part Exchange Welcome
0181 205 8181/0101
219 Kingsbury Rd, London, NW9
Open 10 till 7

உங்கள் உள்ளத்தை மகிழ்விக்கும் ஜவுளி சமுத்திரம்
6 Kumars Silk House
மங்கள கூறைப்பட்டுப் புடவைகள், காஞ்சிபுரம், தக்ஷநோட்ரி, மைசூர், கஸ்மீர் கில்க் முதல் பட்டு வேட்டி, நூல் வேட்டி, சிறுவர் சிறுமியர் ஆடைகளுடன், 10000க்கு மேற்பட்ட தெரிவுகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே தமிழர் புடவை மாளிகை
சிறந்த தரம்! நிறைந்த மலிவு!
முகூர்த்தப் பட்டுப்புடவைகளுக்கு ராசியான ஒரே இடம்
6 குமார்ஸ் சில்க் ஹவுஸ்
285 High Street North, Eastham, London E12 6SL
Tel: 020 8471 5742 Fax: 020 8471 5742

Palm Beach
Fully Licensed
Finest Sri Lankan & South Indian Cuisine
Vegetarian and Non-vegetarian
Open 12.00 noon to 3.00 pm
and
6.00 pm to midnight
Specialised in catering for wedding and parties
17 Ealing Road Wembley Middlx, HA0 4AA
Tel: 020 8900-8664 / 0956-439 765
07939 587 338 / 020 8900 1990

Yoga Raja & Co.
Solicitors-சட்டத்தரணிகள்
125B Mitcham Road Tooting
London SW17 9PE 020 8672 1811

EXPRESS MOTORS
DEALERS IN QUALITY USED CARS
Selection of over 50 Latest Japanese and German Vehicles
91/93 Green St., Forest Gate, E7
Tel: 020 8471 2442
P/X Welcome- Finance Available

GOLDEN EAGLE LTD
MILLENNIUM CLEANING SOLUTIONS
Carpets & Upholstery Cleaning
Daily Office Cleaning Contracts
FREE PHONE 0800 018 2007
Shiva
7 DAYS A WEEK
Fully Insured
Fully Trained Staff
Fast Drying time (1-2 Hours)
Most Stains Removed FREE
100% Safe For Children & Pets
All Work Guaranteed

**Freehold Shop For Sale**

**Based at Finchley London**

**Shop:** Trading CTN Convenience Store
Counter Papers
Confectioneris
Groceries & Officence

Rates £2250 a Year
Area 700Sq Feet
Big yard with **Double Garage**

**Flat:** Good size **Three Bed Room**
with **Big Living-Room**
BathRoom/Loo - Separate
**Modern Kitchen Down stairs**
**New Boiler-recently replaced**

**Price £ 310,000**
**(Also available as leasehold)**

**Genuine enquiries only Contact Dipak 020 8346 3480**

**Shop For Sale With Living Accomodation**
**same owner for 25 years**
**C.T.N. Rent £ 12,000 p/a**
**Rates £ 365 p/m**
**Taking £ 3,200 p/wk**
**National Lottery £ 2,500 p/w**
**Asking Price(leasehold) £ 30,000**
**Genuiene reason for sale -Ill Health**
**More details contact Mr. & Mrs Patel 020-8950-3173**

**Lockup News Agent for Sale**
**With Basement**
**in Hertfordshire**
**Radlett**
**News at cost 3000 to 3200 p/wk (21 rounds)**
**taking 8000 p/wk**
**Price £ 100,000 + S.A.V. Leasehold**
**For Freehold basis £ 250,000**
**Tel: 01923 856 416**

**VMPV VIDEO & ELECTRONIC LTD.**
**Tel: 020 8902 5055**
**Fax: 020 8795 0901**
***150A 2ND FLOOR, EALING ROAD, WEMBLEY, MIDDX. HA0 4PY U.K.***

- லண்டண் வாழ் தமிழ், முஸ்லீம் மக்களின் நலம் கருதி, மலிவு விலையில்!!!
- சகல விதமான DVD, VCD PLAYERS !!!
- மற்றும் மிகப்பழைய, இடைக்கால, புதிய படங்கள் !!!
- DVDs, VIDEO CDs, VIDEO CASSETTES !!!

போன்றவற்றை மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஓர் நிறுவனம் **VMPV VIDEO & ELECTRONICS LTD.**

மேலும் எமது நிறுவனத்தில் சகல விதமான புதிய பழைய (1938) **Video** படங்கள், நாடகங்கள், **DVD, VCD** படங்கள் யாவும் வாடகைக்கு விடப்படும்.
(நாடகங்கள் வாடகை **50p** மட்டுமே)

மேலும் கிருமண மற்றும் சகல வைபோக விழாக்கள் Video Cassetteல் பிரதி செய்தல், பிரதி மாற்றுதல் (NTSC & PAL) போன்றவை இங்கு மிகமலிவில் செய்து தரப்படும்.
இவை யாவற்றுக்கும் நாடவேண்டிய ஓர் நிறுவனம்

சகல **Video, Audio, TV, Car Radio, Vcd Player** யாவும் மிக்குறைந்த விலையில் பழுதுபார்த்து கொடுக்கப்படும்


## தஞ்சம்கோருவோர் மீது பாய்ச்சல்

. தஞ்சம்கோருவோர் உண்மையிலேயே பாதிக்கப்பட்டு தம் உயிரை காக்க வந்திருந்தால் அவர்கள் தடுத்து வைக்கப்படுவதை பற்றி அலட்டி கொள்ளமாட்டார்கள்" என்று கூறி தஞ்சம்கோருவோர் அனைவரும் பிரித்தானிய மண்ணில் கால் பதித்ததும் அவர்கள் தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட வேண்டும்; என்ற நிழல் உள்துறை அமைச்சர் அன் விடகொம்மின் வாதத்திற்கு ஆதரவு தேடுகிறார், நொதம்ரன் தெற்கு தொகுதிக்கு கொன்சவேடிவ் கட்சி சார்பில் வேட்பாளராக நிற்க உள்ள Shailesh Vara.

ஓர் ஆசிய இன அரசியல்வாதி சட்டவிரோத குடியேற்றக்காரரை வெளியேற்றும் படி கோருவது பற்றி கேட்ட போது பிரித்தானிய பிரஜை என்ற வகையில் பிரித்தானியர்களாக சிந்திக்க வேண்டும். இங்கு மிகக் கூடுதலான சட்ட விரோத குடியேற்றகாரர்களால், இங்கு உள்ள இன உறவுகள் பாதிக்கப்படுவதாக கூறினார். சட்டவிரோதமாக குடிவருவோர் அனைவருமே சட்டவிரோத குடியேற்றகாரர்கள், இங்கு இனம் பற்றிய கேள்விக்கு இடமில்லை என்று குறிப்பிட்ட திரு வரா, அவர்கள் அமைதியான முறையில் நாட்டைவிட்டு வெளியேறும் படி கேட்டு கொள்ளப்படுவார்கள் அப்படி செய்யாதவிடத்து அவர்கள் பலவந்தமாக திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று குறிப்பிட்டார்.

திரு வரா குறுகிய கண்ணோட்டத்தில் பார்க்கின்றார். அவருடைய உரையில் இருந்து அவரிற்கு தடுப்பு காவலில் இருப்பது என்றால் என்ன என்பது தெரியவில்லை" என்று ஐரோப்பிய பா.உ ம் Joint Council for Welfare of Immigrants (JCWI) முன்னாள் நிர்வாக இயக்குனருமான Mr Claude Moraes தெரிவித்தார். எந்த நாட்டிலுமே தஞ்சம் கோருவோரை நாட்டினுள் நுழைந்ததும் தடுத்து வைக்கும் திட்டம் இல்லை. மேலும் அனைவரையும் தடுத்து வைப்பதற்கும் மிகுந்த செலவு ஏற்படும் என்பதும் கடந்த காலத்தில் நிரூபிக்கப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது.

வரா கொன்சவேடிவ் கட்சி மாநாட்டில் தொடர்ந்தும் பேசுகையில் ஐரோப்பிய நாணயத்தையும் வன்மையாக எதிர்த்து இருந்தார்.



## தெற்கு இல்போர்ட் ல் சுரேஸ் குமார்

தெற்கு இல்போர்ட் தொகுதியில் கொன்சவேடிவ் சார்பில் சுரேஸ் குமார் போட்டியிட உள்ளார். இவர் கொன்சவேடிவ் கட்சி தலைவர் வில்லியம் ஹெக்கை கட்சி மாநாட்டில் கேள்வி கேட்கும் 10 பேர் கொண்ட குழுவில் அடங்கியிருந்தார். அவர், கட்சி பிரித்தானியாவில் உள்ள எல்லா சமூகங்களையும் கூடுதலாக உள்ளடக்குமா என ஹெக்கை வினவினார். தனது பார்வை பல்லின கலாச்சார கொன்சவேடிவ் கட்சி என்று பதிலளித்தார் கட்சி தலைவர்.

## இலண்டன் செய்தி நிறுவனம் ஆசியர் கையில்?

The Express, The Express on Sunday, Daily Star ஆகியவற்றை வெளியிடும் பத்திரிகை குழுவை ஆசிய மில்லியனயர்கள் வாங்க முயற்சிக்கின்றனர். இந்தியாவில் மோசடி குற்றம் சாட்டப்பட்டு உள்ள சிறிசந்த், கோபிசந்த் என்ற ஹிந்துஜா சகோதரர்களே £100 மில்லியனிற்கு வாங்க முன் வந்து உள்ளனர். இவர்கள் IN Cable Network, IN Time News என்பவற்றின் உரிமையாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## இனவாதிகள் பட்டியல்

ஸ்கொட்லன்ட் யாட் இரகசியமான இனவாதிகள் பட்டியல் ஒன்றை தயாரித்து உள்ளது. அதில் 13,500 இனவாதிகளின் தகவல்கள் பதிவு செய்யப்பட்டு உள்ளது. கூடுதலான இனவாத சம்பவங்கள் நடைபெறும் பகுதிகளில் இருந்தே இப்பட்டியல் தயாரிக்கப்பட்டு உள்ளது. ஆனால் இப்பட்டியலை பொது மக்களிற்கு வெளியிட முடியாது எனவும் அப்படி வெளியிடுவது பட்டியலில் உள்ளவர்களின் சிவில் உரிமையை பாதிக்கும் எனவும் சிவில் உரிமைகள் அமைப்பு கூறுகிறது. அப்படி பட்டியலில் உள்ள இனவாதிகளின் பெயர் வெளியிடப்படும் பட்சத்தில் மக்களே சட்டத்தை தம் கையில் எடுப்பார்கள்; அல்லது தவறாக குற்றவாளிகள் இனம் காணப்படலாம் என்பன போன்ற காரணங்களால் அவ் இனவாத பட்டியல் பொதுமக்களிற்கு வெளியிடப்படமாட்டாது





**Sri-Lankan And South**
**Under new**
**Party orders welcome**
பார்ட்டி ஓடர்கள் குறித்த நேரத்தில்
**Opening Hours**
**mon-Thur**
**12noon-3.00pm / 6.00pm-11.00pm**
**fri/sat**
**12.00noon-12.00midnight**
**sun**
சுவையான அப்பங்கள் சுகாதார முறைப்படி தரமாக உடனுக்குடன்
**200B,Alexandra Avenue**
**South Harrow**
**Tel: 020 8423 9666**

சைவ உணவுப் பிரியர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்.
**TIFFINN**
*Indian, Italian and Chinese*
*Pure Vegetarian Restaurant*
காலை 11.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை, இந்தியன், இத்தாலியன், சைனீஸ் சுத்தமான சைவ உணவு வகைகள் எமது உணவகத்தில் சுடச்சுட சுவையுடன் பரிமாறப்படும்.
**£ 4.95**
மதிய உணவு எதுவாகிலும் உங்கள் விருப்பத்திற்கேற்ப உண்ணலாம்
மற்றும் தொலைபேசி ஓடர்கள் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படும்
அத்துடன் உங்கள் வீட்டு விசேட வைபவங்களுக்கு விசேட விலை கழிவுடன் உணவு வகைகள் வழங்கப்படும்
47 Burnt Oak Broadway,Brunt Oak, Edgware, Middx, HA8 5JZ
(opposite Tesco)
Tel: 020 8200 3555/020 8200 5599

# பிரதமரின் தீபாவளி வாழ்த்து செய்தி

" சிறப்பான இந்நேரத்தில் அனைவரிற்கும் மகிழ்ச்சியும் வளமான எதிர்காலமும் அமைய எனது வாழ்த்துக்கள் " என பிரித்தானிய பிரதமர் ரொனி பிளேயர் தனது தீபாவளி வாழ்த்தை தெரிவித்து இருக்கிறார். தனது வாழ்த்து செய்தியில் திபாவளி மிகவும் சிறப்பான விழா என்று தெரிவித்த பிரதமர், இத்தினத்தில் குடும்பம் என்பது மத்திய ஸ்தானத்தில் வைக்கப்படுவதை சுட்டிக்காட்டி உள்ளார். ஆசிய மக்களின் குடும்ப உறவு மேற்குலகிற்கு இன்று உதாரணமாகி வருவது பிளேயரின் வாழ்த்து செய்தியிலும் தொனிக்கிறது. பிரித்தானியாவில் நாம் சாதித்தவைகளை கொண்டாட இது ஓர் சிறந்த தருணம் என குறிப்பிட்ட பிரதமர், " எமது பின்னணி எதுவாக இருந்தாலும் அவர்களுடைய ஆளுமையை இனம் கண்டு நவீன, வளமான, சமத்துவமான பிரித்தானியாவை உருவாக்க தொடர்ந்தும் உழைப்போம் " என்று தனது வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டார்.

## உதைபந்தாட்டம் :

ஒவ்வொரு கறுப்பின, ஆசிய உதைபந்தாட்டக்காரர்களும் விளையாட்டின் போது இனவாதத்தால் பாதிக்கப்பட்டு உள்ளதாக லீட்ஸ் மெற்றோ பொலிற்றன் பல்கலைக்கழக ஆய்வு சுட்டிக்காட்டி உள்ளது. இதனை தவிர்க்க முன்னுதாரணமான நடத்தைகளை 5 உள்ளாட்சி மன்றங்கள் நடைமுறைப்படுத்த உள்ளன. இதனை அறிமுகப்படுத்தி வைத்த FA, chairman, Geoff Thompson, உதைபந்தாட்டத்தில் பங்குபற்ற விரும்பும் ஒவ்வொருவரும் இனவாத பயமுறுத்தல் இன்றி பங்குபற்றும் உரிமை உடையவர்கள் என்று குறிப்பிட்டார்.

## தாக்குதல் :

ஆசிய இனத்தவராக தவறுதலாக இனம் காணப்பட்ட Leigh Bell (30), நினைவிழக்கும் வரை ஐவரால் தாக்கப்பட்டு உள்ளார். இச்சம்பவம் மஞ்செஸ்ரர் பகுதியில் செப்ரம்பர் இறுதி வாரமளவில் இடம்பெற்றது. இவரது உடல் நிறத்தை வைத்து அவரை ஆசிய இனத்தவராக எண்ணி தாக்குதலை நடத்தியிருப்பதாக தெரியவருகிறது.

## பெற்றோல் பேராசை :

பெற்றோல் தட்டுப்பாட்டு காலத்தில் பேராசைப்பட்ட ஓர் மினிகப் சாரதி 150 லீற்றர் பெற்றோலை தனது வீட்டினுள் பெரிய சில்லுள்ள குப்பை போடும் கொள்கலனில் சேமித்து வைத்தார். அதன் மூலம் அத்தட்டுப்பாட்டு காலத்தில் மற்றயவர்கள் பெற்றோல் இல்லாமல் தவிக்கும் போது தன் மினிகப் வருமானத்தை பெருக்க அவர் திட்டமிட்டார். ஆனால் கொள்கலனில் இருந்த வெடிப்பினால் பெற்றோல் கசிந்து வைக்கப்பட்டிருந்த அறையின் நிலப்பகுதி வரை பெற்றோல் பரவிவிட்டது. இதனால் மணம் அயல் வீடுகளிற்கும் பரவவே அவர்கள் தீயணைப்பு படையை வரவழைத்தனர். தீயணைப்பு படையினர் சோதனையின் போது அத்தெருவில் இருந்த 60 குடும்பங்களையும் வெளியேற்றி தடுப்பு பெற்றோல் புகையை கட்டுப்படுத்தி தீ விபத்து ஏற்படாமல் பார்த்து கொண்டனர். நிலத்தின் கீழ் கசிந்த பெற்றோல் தீயை ஏற்படுத்தலாம் என்பதால் மூன்று வீடுகள் தொடர்ந்தும் வசிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. இச்சம்பவம் டேர்பி எனும் இடத்தில் ஏற்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக சாகிப் பஷீர் என்பவர் பொலிஸாரால் விசாரனைக்கு உட்படுத்தப்பட்டார். இவர் தனது செயலிற்காக அனைவரிடமும் மன்னிப்பு கேட்டு கொண்டார்.

## சால்மன் ருஸ்டி :

சாத்தானின் வேதங்கள் நூலை வெளியிட்டு சர்ச்சைக்குரியவரானவரும் ஈரானிய ஆயத்துல்லா கொமெய்னியால் மரணதண்டனை விதிக்கப்பட்டவருமான மில்லியனயர் எழுத்தாளர் ருஸ்டி, பிரித்தானிய வரி செலுத்துவோரின் பணத்தை விரயமாக்குவதாக ஆசிய தொழிற்கட்சி முன்னணி உறுப்பினர்கள் குற்றம்சாட்டி உள்ளனர். தற்போது அவர் மீதான மரண தண்டனை நீக்கப்பட்ட போதும் அவருடைய பாதுகாப்பிற்கு ஆண்டிற்கு ஒரு மில்லியன் பவுணை பிரித்தானிய அரசு செலவிடுகிறது. நியுயோர்க்கில் வசிக்கும் இவர் இந்திய அழகி பத்மா லக்ஷ்மியுடன் தற்போது உறவு கொண்டு உள்ளதாகவும் வரி செலுத்துவோர் செலவில் உல்லாச வாழ்க்கை வாழ்வதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது. அவருடைய பாதுகாப்பு செலவுகளை அவரே செலுத்த வேண்டும் கோரப்படுகிறது.

## நேர்மை பட்டியல் :

2000 ஆண்டிற்கான The Corruption Perceptions Index CPI பட்டியல் வெளியிடப்பட்டு உள்ளது. இதன் படி நேர்மையான நாடுகள் பட்டியலில் கடந்த ஆண்டு 72வது இடத்தில் இருந்த இந்தியா இவ்வாண்டு 69வது இடத்திற்கு வந்து உள்ளது. கடந்த ஆண்டு 89வது இடத்தில் இருந்த பாகிஸ்தான் இவ்வாண்டு பட்டியலில் இடம்பெறவே இல்லை. பிரித்தானியா 10வது இடத்திலும் பின்லண்ட் மிக நேர்மையான நாடாக முதலாவது இடத்திலும் இருக்கின்றது. இப்பட்டியல் ஒவ்வொரு நாட்டிலும் 16 வெவ்வேறு தரவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்படுகிறது. அந்நாட்டில் உள்ள வர்த்தகர்களின் கருத்து, பொதுமக்களின் கருத்து, பொருளாதார ஆய்வாளர்களின் ஆய்வு இவையே முக்கிய அளவீடுகளாக இருக்கின்றது.

இதே அமைப்பு இவ்வாண்டு வெளியிட்ட இலஞ்சம் வழங்கும் நாடுகளின் பட்டியலில் சுவீடனே முதல் இடம்பெறுகிறது. பிரித்தானியா, அமெரிக்கா ஆகியன முறையே 7வது, 10வது இடங்களில் உள்ளன.

## TIC கண்டனம்

பண்டாரவளையில் இடம்பெற்ற படுகொலை சம்பவத்தை தமிழர் தகவல் நடுவம்(TIC) வன்மையாக கண்டித்து உள்ளது. பல்வேறு மனித உரிமை அமைப்புகளும் இச்சம்பவத்தை கண்டித்து உள்ளன. இலங்கை அரசின் பிரச்சார தந்திரத்திற்கு ஏற்பட்ட பலத்த அடியாக இது அமைந்து உள்ளது.


KEY CONSULTANTS

Fax: (020) 8952 5677

NEED A MORTGAGE ?

WHATEVER BE YOUR CIRCUMSTANCES OR OCCUPATION CALL

(020) 8952 7775

* Competitive Rates Available * High Speed Re-mortgages * Any Financial Difficulty Considered * Immediate in-principle decision * Bridging Loans

* Your home is at risk if you don't keep up repayments on a mortgage or other loan secured on it.

உங்கள் இல்லத்தினதும் அதன் மீதும் பெற்ற கடனையும் குறித்த காலத்தில் மீள செலத்தத் தவறினால் உங்கள் இல்லத்தை இழக்க நேரிடும்

No Proof of Income - NO PROBLEM?

வருமான அத்தாட்சி இல்லை - இது ஓர் பிரச்சனையே இல்லை

Upto 95% Mortgage

* **Quick** Mortgage Services
  - Residential Mortgage & Re-Mortgage
  - Commercial Mortgage & Re-Mortgage
* Personal ( Secured & Unsecured Loans)
* Business Loans ( Towards business development)
* Business Purchase Loans ( Are you buying a Newsagent/Convenience Stores/Off Licence/Super Market/Post-Office/Restaurant ? Call us for quick processing)
* Special Car Loans (Used Cars)
* Competitive Insurance Services
  - Property Insurances (Residential & Commercial)

விரைவான Mortgage சேவைகள்
  - வீட்டு Mortgage & Re-Mortgage
  - வர்த்தக Mortgage & Re-Mortgage
* தனிப்பட்ட கடன் (பொறுப்புள்ள & பொறுப்பற்ற )
* வியாபாரக் கடன் ( வியாபாரத்தை பெருக்க )
* வியாபாரக் கொள்வனவுக் கடன் ( நீங்கள் Newsagent / Convenience Stores / Off Licence / Super Market / Post-Office / Resturant வாங்க விரும்புகிறீர்களா? அதனை உடன் நிறைவேற்ற; உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும். )
* விசேட கார் கடன்
* முன்னணி காப்புறுதி சேவைகள்

PLASWARE

Manufacturers and exporters of Disposable Catering and Party Products

FOR ALL CATERING, WEDDING AND PARTY REQUIREMENTS

WE STOCK:

- PLAIN AND SECTION PLATES IN PLASTIC AND FOAM
- PLASTIC CLEAR AND FOAM GLASSES AND CUPS
- PLASTIC CUTLERY
- 32 DIFFERENT COLOURED PAPER AND DISPOSABLE LINEN NAPKINS
- MATCHING TABLE COVERS AND BANQUETING TABLE COVER ROLLS
- FOIL PLATTERS AND CONTAINERS, CUPS
- PAPER PLATES AND COATED PAPER PLATES
- PLASTIC AND FOAM BOWLS
- SWEETS AND FOOD PACKING CONTAINERS
- BALLOONS, RIBBONS, CREPE PAPER ROLLS AND SHEETS
- DECORATIONS, FOIL BALLOONS, PARTY POPPERS, PARTY HATS
- BALLOON GAS TANK HIRED OUT AND MANY MORE PARTY DECORATIONS AND PRODUCTS

பார்டி சம்பந்தமான தேவைகளுக்குரிய எல்லாவகையான பிளாஸ்ட்டிக் மற்றும் போம் தட்டுகள், கப்புகள், பலூன்கள், பவல்கள், வாடகைக்கு பலூன் காஸ் டாங்க் மற்றும் இதர பொருட்களை நாங்கள் தயார் செய்து விற்கின்றோம். மேலும் விவரங்களுக்கு கீழ்காணும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

WE ARE HERE

Honeypot Lane

Alpine Double Glazing

Party products by PLASWARE

New Safeway Stores

WE CAN ALSO PRINT ON BALLOONS AND NAPKINS WITH PERSONAL MESSAGES AND STANDARD STOCK LOGOS

Come and see our Showroom:

PLASWARE "SAI HOUSE" UNIT3 BOWMAN TRADING ESTATE, WESTMORLAND ROAD (OFF HONEYPOT LANE), KINGSBURY, LONDON NW9 9RL

OPEN MON-SAT: 9.30AM - 7.00PM

020 8206 1292 FAX: 020 8204 6883

E-Mail: plasware@plasware-international.co.uk

Euro Star Ltd.

Automobile Engineers

Vacancies

*1st class mechanic +M.O.T. tester wanted. (Experience in Mercedes Benz cars Preferable)

*Assistant mechanic wanted

*Person required for Valetting cars (valetor) In London Tooting and surrounding area (A well established garrage) looking for three suitable persons for the above vacancies.

முதல்தரமான வாகன திருத்துனர் தேவை(பென்ஸ் கார் வேலை தெரிந்தவர் நல்லது)

உதவி கார் திருத்துனர் தேவை

கார் உள்ளும் வெளியும் சுத்தம் செய்யக்கூடியவர் தேவை

Contact

ALI

020 8672 3700

020 8767 9511

# சிறிமா : ஓர் தோல்வியடைந்த இன்னுமோர் அரசியல் அத்தியாயம்



இன்றைய இலங்கை : 52 ஆண்டுகள் சுதந்திரத்தின் பின்னும் இன்று இலங்கை, பொருளாதார வளர்ச்சியில் பின் தங்கியே உள்ளது. 1960களில் இலங்கையின் தலாவருமானமும் சிங்கப்பூர், கொரியா ஆகிய நாடுகளின் தலா வருமானமும் சமனாகவே இருந்தது. ஆனால் தற்போது இலங்கையின் ஆண்டுக்கான தலாவருமானம் 600 டொலராக இருக்க சிங்கப்பூரினது 13,000 டொலராகவும் கொரியாவினது 7,000 டொலராகவும் உள்ளது. இந்தியா, கொரியா ஆகியவற்றின் பொருளாதார வளர்ச்சி வீதம் 6% மாகவும் சிங்கப்பூரினது 8.4% வீதமாகவும், இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் 3% ஆகவே உள்ளது. அதுமட்டுமல்லாமல் தற்கொலை வீதம் அதிகமுள்ள ஓர் நாடாக இலங்கை இருந்து வருகிறது. இதற்கு சமூக, பொருளாதார நிலைமைகளே முக்கிய காரணிகளாக இருந்து வருகிறது. (தற்கொலை தாக்குதலில் ஈடுபடுவோர் சேர்க்கப்படவில்லை.) இலங்கை பாராளுமன்றத்தில் இன்றும் விரல் விட்டு எண்ண கூடிய பெண் பா.உ களே உள்ளனர். மேலும் இலங்கை தற்போதும் வறிய நாடாகவே இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றை எல்லாம் நோக்கும் போது இலங்கை சுதந்திரத்தின் பின் சமூக, அரசியல், பொருளாதார நிலைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடையவில்லை என்பது தெளிவான உண்மை.

இலங்கை அரசியல் சிறிமா : இலங்கை 1948ல் சுதந்திரம் அடைந்தது முதல், இன்று வரையான 52 ஆண்டு காலப்பகுதியும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியாலும், ஐக்கிய தேசிய கட்சியாலும் ஆளப்பட்டு வந்திருக்கின்றது. இந்நாடு இக்காலப்பகுதியில் அடைந்துள்ள ஏற்றத்திற்கும் தாழ்விற்கும் இவ்விரு கட்சிகளும் தான் பொறுப்பு. (1956 - 1965), (1970 - 1977), (1974 - தற்போது வரை) உள்ள காலப்பகுதியான 22 ஆண்டுகளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் இருந்து இருக்கிறது. திருமதி சிறிமா பண்டார நாயக்கா இந்த 22 ஆண்டுகளிலும் இலங்கை அரசியலில் ஓர் அரசியல் ஆளுமை உள்ள பெண்மணியாக இருந்து உள்ளார். ஆரம்பத்தில் நான்கு ஆண்டுகள் இலங்கையின் முதற் பெண்மணியாக (பிரதமர் பண்டார நாயக்கவின் மனைவி) வும் இறுதி ஆறு ஆண்டுகள் பிரதமராகவும் இவர் அரசியல் செல்வாக்குடன் இருந்து உள்ளார். இடைப்பட்ட 12 ஆண்டுகள் நாட்டின் நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமராக இருந்து உலகின் முதல் பெண் ஆட்சி தலைவி என்ற வரலாற்று பெருமையையும் பெற்று இருக்கிறார். சிறிமாவோ பண்டாரநாயக்கா ஓர் சிறந்த நேர்மையான அரசியல்வாதியாக இருந்து இருந்தால் அவரால் இலங்கையின் பின்னடைவை தடுத்து நிறுத்தி இருக்க முடியும். ஆனால் அவர் அப்படி செய்யவில்லை.

தமிழ் மக்களும் சிறிமாவோ பண்டாரநாயக்காவும் : சிறிமா, சுதந்திர இலங்கையில், இனவாதத்தின் முக்கிய சூத்திரதாரிகள் என்று சுட்டிக்காட்டக் கூடியவர்களுள் ஒருவராகவே இருந்தார். ஆட்சியை கைப்பற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கில், ஆங்கில மொழியில் கல்வி பயின்று, உயர்வு பெற்ற கிறிஸ்தவரான பண்டாரநாயக்கா, 1956ல் தனி சிங்கள மொழிச்சட்டத்தை இயற்றினார். இதன் மூலம் 1956லும் 1958லும் இனக்கலவரம் ஏற்பட்டது. முன்னையதில் 150 தமிழர்களும் பின்னையதில் 1,000 தமிழர்கள் வரையும் கொல்லப்பட்டனர்.

பண்டாரநாயக்கா சுடப்பட்டதை தொடர்ந்து அனுதாப வாக்குகளை வென்று 1960ல் பதவிக்கு வந்த திருமதி பண்டாரநாயக்க கணவருடைய கொள்கைகளையே தொடர்ந்தும் அமுல்படுத்தினார். 1961ல் தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகத்தை, அவசரகால சட்டத்தை பயன்படுத்தி, தன் ஆயுதப்படைகளை கொண்டு தடியடி பிரயோகம் செய்து கலைத்தார். அதன் தொடர்ச்சியாக தமிழரசுக் கட்சி இயங்கவும் தடைவிதிக்கப்பட்டது. சிறிமாவோ பண்டாரநாயக்க மீண்டும் 1970ல் பதவிக்கு வந்த பின்பே 1972ல் சிலோன் பெயர் மாற்றம் பெற்று 'இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு' ஆகியது. இதன் மூலம் பிரித்தானிய முடியாட்சியுடன் இருந்த தொடர்புகள் முற்றாக துண்டிக்கப்பட்டது. மேலும் 1972ல் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் யாப்பு சீர்திருத்தம், 1948ல் இருந்து அமுலில் இருந்த யாப்பில் சிறுபான்மை சமூகங்களிற்கு அளிக்கப்பட்டு இருந்த பாதுகாப்பை முற்றாக இல்லாதொழித்தது. அவ்யாப்பின் 29ம் பிரிவு, ஒரு சமூகத்தவருக்கு இல்லாத கட்டுபாடுகளை மற்றோர் சமூகத்திற்கு விதிக்கும் சட்டங்களை பாராளுமன்றத்தில் இயற்ற முடியாது என்றும்; ஒரு சமூகத்திலும் பார்க்க மற்றய சமூகத்திற்கு சலுகைகளை பாராளுமன்றம் அளிக்க முடியாது என்றும் கூறுகிறது. ஆனால் புதிய யாப்பு சிங்களத்தை அரசகரும மொழியாகவும் பௌத்தமதத்தை அரச மதமாகவும் ஆக்கியது. இது சிறுபான்மை சமூகங்களை இரண்டாம் பட்சநிலைக்கு தள்ளி, அவர்களது சமூக, கலாச்சார, அரசியல் வாழ்வையும் அன்றாட வாழ்க்கையையும் கடினமாக்கியது. மேலும் தமிழ் மாணவர்களிற்கு எதிரான இனரீதியான தரப்படுத்தலை அறிமுகப்படுத்தி தமிழ் மாணவர்களின் அடிமடியிலேயே சிறிமா கை வைத்தார்.

இலங்கையின் சிரழிவிற்கு முக்கிய காரணியாக இருந்த இனவாத அரசியலை சிறிமாவோ அவரது சுதந்திர கட்சியோ கடைசி வரை பற்றி பிடித்த வண்ணமே இருந்தனர். தனது வாழ்வின் இறுதிக் கட்டத்தில் கூட திருமதி பண்டாரநாயக்க சிங்கள மக்களிடம் உண்மையை மறைத்துவிட்டே சென்று உள்ளார். எந்த சிங்கள ஆட்சி தலைவர்களும் நாட்டிற்கும்; அவர்கள் பிரதிநிதித்துவம் செய்த மக்களிற்கும் நேர்மையாக நடக்கவில்லை. அதற்கு நாட்டின் இன்றைய நிலையே சாட்சி. அந்த நேர்மையற்ற தலைவர்கள் பட்டியலில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் பெயரையும் வரலாறு குறித்து கொள்ளும்.

# சிறிமாவோ பண்டாரநாயக்காவும் சுதந்திர இலங்கையும்

1916 ஏப்ரல் 17 ல் பிறந்தார் சிமாவோ. றத்வத்தே.
1940 தனது 24ம் வயதில் பண்டாரநாயக்காவை மணம் முடித்தார்.
1951 UNP ல் இருந்து பிரிந்த பண்டாரநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை ஆரம்பித்தார்.
1956 தனிச் சிங்கள கோசத்தை வைத்து பண்டாரநாயக்கா பிரதமரானார்.
1956 சுதந்திர இலங்கையில் முதலாவது இனப்படு கொலை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஆட்சியில் இடம்பெற்றது. 150 தமிழர்கள் இறந்தனர்.
1958 அதே ஆட்சியில் இரண்டாவது இனக்கலவரம் இடம்பெற்றது. அதில் 1000 தமிழர்கள் வரை படுகொலை செய்யப்பட்டனர்.
1959 ஆங்கில மருத்துவ முறையை கொண்டுவர முனைந்த பண்டாரநாயக்க புத்த பிக்குவால் சுட்டு கொல்லப்பட்டார்.
1960 திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமராக தெரிவு செய்யப்பட்டார். உலகில் முதல் பெண் ஆட்சி தலைவி என்ற வரலாற்று பெருமையை இதன் மூலம் பெற்று கொண்டார்.
1961 சத்தியாகிரகம் நடாத்திய தமிழரசு கட்சியையும் ஆதரவாளர்களான தமிழர்களையும் அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்தி, ஆயுதபலத்தால் அவர்களை விரட்டியடித்தனர்.
1964 இந்தியவம்சாவளி மக்களை வெளியேற்றும் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம், சம்பந்தப்பட்ட மக்களுடன் விவாதிக்காமலேயே வரையப்பட்டது.
1965 ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் டட்லி செனநாயக்க, சிறிமாவை தோற்கடித்தார்.
1970 சிறிமா, இடதுசாரிகளின் துணையுடன் மீண்டும் ஆட்சியை கைப்பற்றினார்.
1971 ஜேவிபி கிளர்ச்சி இடம்பெற்றது. இக்கிளர்ச்சி மிகக் கொடூரமான முறையில் சில வாரங்களிற்குள் அடக்கப்பட்டது. இதன் போதே முதற் தடவையாக இந்திய இராணுவம் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டது. இதே ஆண்டில் இனவாத தரப்படுத்தல், தமிழ் மாணவர்களிற்கு எதிராக கொண்டுவரப்பட்டது.
1972 யாப்பு சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டு, சிறுபான்மை இனங்களிற்கு அளிக்கப்பட்டு இருந்த அரசியல் பாதுகாப்பு இல்லாது ஒழிக்கப்பட்டது.
இதே காலப்பகுதியில் யாழ் இளைஞர்கள் புதிய தமிழ் புலிகள் அமைப்பை உருவாக்கினர்.
1974 நான்காவது உலக தமிழ் ஆராய்ச்சி மாநாடு பொலிஸாரினால் குழப்பப்பட்டது. இதன் போது ஒன்பது தமிழர்கள் கொல்லப்பட்டனர்.
1975 தமிழ் இளைஞர்கள் முதற் தடைவையக இனவாதத்திற்கு எதிராக ஆபுதம் ஏந்தி, தமிழாராய்ச்சி மாநாட்டின் குழப்பத்திற்கு காரணமான சிறிமாவோவின் விசுவாசியான அல்பேட் துரையப்பாவை சுட்டு கொன்றனர்.
1976 தமிழர் விடுதலை கூட்டணி தனி தமிழீழம் கோசத்துடன் உதயமானது.
இதே காலப்பகுதியில் வேலுப்பிள்ளை பிரபாகரன் புதிய தமிழ் புலிகளில் இருந்து ' தமிம் ஈழ விடுதலைப் புலிகள் '; அமைப்பை உருவாக்கினார்.
1977 ஜே ஆர் ஜெயவர்த்தனா சிறிமாவை பெரும்பான்மையுடன் தோற்கடித்து அடுத்த 17 ஆண்டுகள் வரை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை எதிர் கட்சியிலேயே இருத்தினார்.
1980 சிறிமாவின் குடிஉரிமை பறிக்கப்பட்டு 1986 வரை அவர் அரசியலில் ஈடுபடுவதும் தடுக்கப்பட்டது.
1986 சிறிமாவின் உரிமைகள் மீள அளிக்கப்பட்டது.
1988 சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரேமதாஸாவை எதிர்த்து போட்டியிட்டு தோல்வி அடைந்தார்.
1994 திருமதி பண்டாரநாயக்க 1994 தேர்தலில் தனது மகளான சந்திரிகாவை நிறுத்தி வெற்றியீட்டினார். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தாயாரை பிரதமராக்கினார்.
2000 உடல்நிலை காரணமாக திருமதி பண்டாரநாயக்க பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார்.
2000 ஒக்ரோபர் பத்தாம் திகதி உலகின் முதல் பெண் பிரதமர் தனது இறுதி வாக்கை அளித்தார். அதே தினத்தில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா விதைத்த வினையின் அறுவடையையும் பார்த்து உயிர் நீத்தார். இவரும் இலங்கையின் நீர்குமிழி அரசியல் தலைவியானார்.

# 2000ம் ஆண்டு தேர்தல்

## மீண்டும் சந்திரிகா

பல வன்முறை சம்பவங்களிற்கு மத்தியில் நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் சந்திரிகாவின் மக்கள் அணி மொத்தமாக 107 ஆசனங்களை வென்றுள்ளது. ஆனால் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காததால் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியுடனும் முஸ்லீம் ஐக்கிய தேசிய அணியுடனும் கூட்டு சேர்ந்து ஆட்சி அமைக்க உள்ளது.

225 பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்ய நடந்த தேர்தலில், முக்கிய இரு கட்சிகளிடையேயும் எந்த அரசியல், பொருளாதார கொள்கை வேறுபாடுகளும் காணப்படவில்லை என, இரு கட்சிகளது தேர்தல் விஞ்ஞாபனங்களை ஆராய்ந்த சுயாதீன குழு தெரிவிக்கிறது. இத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குகள் 12 மில்லியனிற்கு சற்று அதிகமாக இருந்தது. தேர்தலில் 29 கட்சிகளிலும் 99 சுயேட்சை குழுக்களில் இருந்தும் 5,048 வேட்பாளர்கள் 196 இடங்களிற்காக போட்டியிட்டனர். யாழ்ப்பாணத்தில் கட்சிகள், சுயேட்சை குழுக்கள் என 20 அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகள் தேர்தலில் நின்றன.

Urooj Jewellers & Gold Smith
We are pleased to offer discount
on 22 Carat gold jewellery
upon our opening ceremony
We buy old jewellery
No V.A.T. for visitors
Opening offer
உதயன் வாசகர்களுக்கு விசேட கழிவு உண்டு
131 Green Street, Forest gate,
London E7 8JF
Opposite Green Street Mosque
Tel: 020 8472 1999

ஈழத் தமிழர்களே !
உங்கள் அரசியல் தஞ்ச
மேன்முறையீட்டு
விசாரணைக்கு அதிக பணம்
செலவிட வேண்டும்
என்ற கவலையா கவலையை
விடுங்கள்
தொடர்புகட்கு:
சர்வதேச அகதிகள் சம்மேளனம்
1083 Garratt Lane
London SW17 0LN.
Tel: 0181 682 4494, 0181 682 9480

முத்துக்கள், சுத்தமான நவரத்தினக்கற்கள்
சாத்திர விதிகளுக்கு ஏற்ப நவரத்தின
மோதிரங்கள் ஓடர்களுக்கு
செய்து கொடுக்கப்படும்.
பொன்னுருக்களுக்கு ஏற்ற
சகல ஒழுங்குகளும்
செய்து கொடுக்கப்படும்



உங்கள் எண்ணங்கள் எங்கள் கைவண்ணத்தில்
ROYAL JEWELRY
றோயல் ஜூவலரி
287, High Street North
Eastham-Manor Park
London E12 6SL
Tel: 020 8472 5500

## CPJ நிருபரின்... (1ம் பக்க தொடர்ச்சி)

குறிப்பிடத்தக்கது. உள்நாட்டு யுத்தம், மனித உரிமைகள், தமிழ் அரசியல் குழுக்களின் அரசியல் ஆகியவற்றை இவர் ஆராய்ந்து பக்கசார்பற்ற செய்திகளை உடனுக்கு உடன் வழங்கி வந்தார். பல்வேறு பயமுறுத்தல்களிற்கு மத்தியிலும் பல்வேறு நெருக்கடியான சூழ்நிலையிலும் குடாநாட்டின் உண்மை நிலவரத்தை சர்வதேச அரங்கிற்கு கொண்டு வந்த நிர்மலராஜனின் பங்கு பலராலும் கௌரவிக்கப்படுகிறது. அவரது படுகொலை சர்வதேச அமைப்புகளினாலும் செய்தி நிறுவனங்களினாலும் வன்மையாக கண்டிக்கப்பட்டு உள்ளது.

கண்டனம் : ஊடகவியலாளர்களின் பாதுகாப்பிற்கான குழு ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்து உள்ள மடலில் கொலையை கண்டித்து உள்ளதுடன், தமது சகபணியாளரின் மரணத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் வெளியிட்டு உள்ளது. குற்றவாளிகளை கண்டு பிடிக்கும்படி வேண்டுகோள் விடுத்துள்ள அவ்வமைப்பு இக்கொலை இடம்பெற்ற சூழ்நிலையை ஆராய்வார்கள் என்றும் தெரிவித்து உள்ளனர். அரசு விரைவில் தனது விசாரணை முடிவுகளை மக்களிற்கு தெரியப்படுத்தி குற்றவாளிகளிற்கு தண்டனையை பெற்று கொடுக்க வேண்டும். இல்லையேல் எந்த நிருபருடைய உயிரிற்கும் உத்தரவாதம் கிடையாது என அம்மடலில் குறிப்பிடப்பட்டு உள்ளது. இதே கருத்தை சுதந்திர ஊடகத்திற்கான இயக்கமும் வெளியிட்டு உள்ளது. அவ்வமைப்பின் வருண கருணாதிலக்க, நிருபர்களை படுகொலை செய்கின்ற போக்கு உருவாகாது என நம்புவோம் என்று தமது அச்சத்தை வெளியிட்டு உள்ளார். பிபிசி சிங்கள சேவையின் ஆசிரியர் பிரியத் லியனகே நிர்மலராஜனின் இழப்பினால் குடாநாடு சர்வதேச அரங்கில் இருந்து துண்டிக்கப்பட்டு விடும் என்று அச்சம் தெரிவித்து உள்ளார். அவர் தொடர்ந்து வெளியிட்ட கருத்தில் நிர்மலராஜனுடைய சகாக்களும் இலங்கை மக்களும், தான் கொண்ட நம்பிக்கைக்காக உயிரிழந்த அவருடைய திறமையை நினைவு கூருவார்கள் என்று குறிப்பிட்டார்.

சம்பவம் : ஒக்ரோபர் 19ம் திகதி உலகின் அபாயகரமான பகுதிகளில் ஒன்றான யாழ்குடாவில் உள்ள தனது இல்லத்தில் வைத்து நிர்மலராஜன் இனம் தெரியாத நபர்களால் சுட்டு கொல்லப்பட்டார். தனது கல்விஅறையில் ஓர் செய்தி அறிக்கையை தாயாரித்து கொண்டிருந்த போது யன்னலினூடாக அவர் சுடப்பட்டார். பின்னர் அவர்களது முன்னறை பகுதிக்கு கிரனைட் வீசப்பட்டது. அதன்போது நிர்மலராஜனுடைய 11 வயதே நிரம்பிய மருமகனும் அறுபதுக்களில் உள்ள அவருடைய வயோதிப பெற்றோரும் காயமடைந்தனர். பக்கத்து அறையில் இருந்த அவருடைய மனைவி பெரியமலரும் மூன்று குழந்தைகளும் காயம் இன்றி தப்பித்து கொண்டனர். உடனடியாக இராணுவ அதிகாரிகளை வீட்டிற்கு வரவழைத்தார் அவரது மனைவி. காயப்பட்ட நிருபர் உடனடியாக யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் உயிரிழந்தது அறிவிக்கப்பட்டது.

பின்னணி : நிர்மலராஜன் அண்மையில் நடந்த பாராளுமன்ற தேர்தல்களில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் பற்றி செய்திகள் வெளியிட்டு உள்ளார். மேலும் குறிப்பிட்ட ஓர் முன்னாள் இராணுவ குழுவின் அரசியல் நடவடிக்கைகள் பற்றி முக்கிய செய்தி ஆய்வொன்றையும் மேற்கொண்டு இருந்தார். இது தான் இவர் மீதான கொலை தாக்குதலிற்கு காரணமாக இருந்திருக்கலாம் என இவரது சகநண்பர் பிரான்ஸ் AFP செய்தி ஸ்தாபனத்திற்கு தெரிவித்து இருக்கிறார். மிகுந்த இராணுவ பாதுகாப்பிற்குள் உட்பட்ட பகுதியில், தேர்தல் இடம்பெற்று 9 தினங்களிற்கு பின் இக்கொலை நடைபெற்று உள்ளது. 1994 தேர்தலில் யாழ் மாவட்டத்தில் 9 இடங்களை பெற்ற EPDP இம்முறை நான்கு இடங்களை மட்டுமே பெற்றுள்ளனர். அவர்கள் போட்டியிட்ட திருமலை, மட்டக்களப்பு, வன்னி ஆகிய மாவட்டங்களில் எந்த இடத்தையும் பெறவில்லை. யாழ்மாவட்டத்தில் போட்டியிட்ட முக்கிய இராணுவக்குழு இவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

உதயன் : மிகுந்த நெருக்கடி நிலைக்கு மத்தியில் தன் உயிரை பணயம் வைத்து குடாநாட்டின் நிலையை சர்வதேச அரங்கிற்கு கொண்டு வர அயராது உழைத்த மயில்வாகனம் நிர்மலராஜனின் படுகொலையை உதயன் பத்திரிகை வன்மையாக கண்டிக்கிறது. குற்றவாளிகள் இனம் காட்டப்பட்டு தண்டிக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் இப்படியான சம்பவங்கள் இடம்பெறாது தடுக்க அனைத்து முயற்சிகளையும் எடுக்கும் படி இலங்கை அரசையும் சம்பந்தப்பட்ட அனைவரையும் கேட்டு கொள்கிறோம். திருமதி நிர்மலராஜனிற்கும் அவரது குடும்பத்தாரிற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்கிறோம்.

## முன் அணி நோக்கி...

(1ம் பக்க தொடர்ச்சி)

